**ஹிங்குரக்கொட பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 11 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 1,480,914 பெறுமதியான மூன்று சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைக்குச் சொந்தமாகக் காணப்படும் 47 கடைகள், 09 வீடுகள் மற்றும் 7 நீர் திட்டங்கள் ஆகியவற்றிற்கான நிலையான சொத்துக்களின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) ஹிங்குரக்கொட ஞாயிறு சந்தை நடத்தப்படும் புகையிரத காப்புக் காணிக்காக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வரியின் பெறுமதியினை ரூபா 2,925,557 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய வரித்தொகை தொடர்பாக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 02 சொத்து விடயங்களின் பெறுமதியில் ரூபா 355,977 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது ஜயந்திபுர விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 583,229 இற்கான தொகையினை மூலதனப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் பெற வேண்டிய பொருட்களின் பெறுமதி ரூபா 62,436,794 தொகை எனினும் அதனோடு தொடர்புடைய கணக்கீட்டுப்

பதிவுகளின் படி அப் பெறுமதி ரூபா 49,856,201 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 12,580,593 இற்கான வித்தியாமொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுப்பெறுமதி ரூபா 435,742,983 தொகைக்கான 05 சொத்து விடயங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடு, மெய்மையாய்தல் சபை அறிக்கைகள் மற்றும் விரிவான அட்டவணைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாகப் பரிசோதனை மேற்கொள்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நி.பி. 571,572 | வைப்புச் செய்யப்பட்டு 2 வருடங்கள் முதல் 7 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த ரூபா 1,143,824 தொகை பெறுமதியான விடுவிக்கக் கூடிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| (i) விதி இலக்கம் 19 | 2010 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த 10 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் தொடர்பான அடிக்கட்டைப் புத்தகங்கள் 2017 ஏப்ரல் மாத இறுதி வரை திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை. |
| (ii) விதி இலக்கம் 59 முதல் 63 வரை | சபை அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் பற்றிய அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு கட்டணங்கள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) விதி இலக்கங்கள் 203,204 மற்றும் 218 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

(இ) சுற்றறிக்கைகள் மற்றும் சுற்று நிருபங்கள்

| | |
|---|---|
| வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1995 ஜனவரி 29 ஆம் திகதிய NCP/PL/4/2/10/1/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பயன்படுத்தும் மற்றும் பொறுப்பில் இருக்கும் சொத்துக்களின் தன்மைகளின் பிரகாரம் ஊழியர் பிணை வைப்பு பெறப்பட வேண்டிய போதிலும், சபையினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, 2016 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 16,564,229 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 689,653 தொகையாகும்.

### 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

#### 2.2.1 வீதவரி

வருட ஆரம்பத்தில் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,341,535 மற்றும் ஆண்டின் போது சிட்டையிட்ட ரூபா 2,162,203 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்த வீதவரி வருமானம் ஆகிய ரூபா 4,503,738 தொகையில் அறவிடப்பட்டிருந்தது ரூபா 1,741,956 தொகை எனப்படும் 38 சதவீதம் மாத்திமே.

#### 2.2.2 வாடகை

ஆண்டின் போது சிட்டையிடப்பட்ட வாடகை வருமானமாகிய ரூபா 3,389,267 தொகையில் அறவிடப்பட்டிருந்தது ரூபா 1,732,604 தொகை எனப்படும் 51 சதவீதம் மாத்திரமே.

#### 2.2.3 ஏனைய வருமானங்கள்

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 7,501,738 இற்கான நிலுவை மற்றும் ஆண்டின் போது சிட்டையிடப்பட்ட ரூபா 1,778,431 தொகையுடன் மொத்த செயற்படு வருமானம் ஆகிய ரூபா 9,280,169 தொகையில் சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 578,946 தொகை எனப்படும் 6 சதவீதம் மாத்திரமே.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

2016 பாதீட்டின் மூலம் ரூபா 3,750,000 தொகைக்கான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்ட அமுல் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த 16 செயற்திட்டங்களை அமுல் நடத்தியிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) ஹிங்குரக்கொட ஞாயிறு சந்தை நடாத்தப்படும் புகையிரத காப்புக் காணிக்காக செலுத்த வேண்டிய வாடகைத் தொகை தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளமையால் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வாடகைத் தொகை ரூபா 3,762,617 தொகையாக இருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு செலுத்த வேண்டிய தொகையினை இதுவரை இனங்கண்டிருக்கவில்லை.

(ஆ) ஹிங்குரக்கொட பிரதேச சபைக்குச் சொந்தமான 2 அரசாங்க வீடுகளில் வசிப்போரினால் அவற்றை உரித்தாக்குவதற்கு முயற்சிகள் செய்துகொண்டிருந்த போதிலும் இது தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

ஓட்ட நிலையில் காணப்படாத டிரக்டர் வண்டி ஒன்று, பெக்கோ லோடர் ஒன்று, லொறி ஒன்று மற்றும் டபள் கப் வண்டி ஒன்று என்பன பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 360,928 தொகை பெறுமதியான 326 கொடித்தூண்கள் மற்றும் ரூபா 76,000 தொகை பெறுமதியான மடி கணனி ஒன்று என்பன பௌதீப் பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) மீளாய்வாண்டிற்கான கடை வாடகை வருமானத்தை சேகரிக்கும் போது உரிய பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி மீது கவனம் செலுத்தாமல் 2003 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி மீது கட்டணம் அறவிடப்படுவதினால் ரூபா 3,156,000 பெறுமதியான வருமானத்தை இழந்துள்ளது.

(ஆ) ஹிங்குரக்கொட பிரதேச சபையினால் ஹிங்குரக்கொட நீதிமன்ற வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சட்டத்தரணிகள் அலுவலக வளவுக்கு உரிய காணியினை உரித்தாக்குவதற்கும், நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள 16 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய கேள்வி கட்டணம் ரூபா 3,465,325 தொகை மற்றும் மாதாந்த வாடகை ரூபா 432,000 தொகையினை அறவீடு செய்வதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.6 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

(அ) பிரதேச சபையினால் ஒரு நாளில் சேகரிக்கும் 06-07 இடைப்பட்ட தொன்கள் கழிவுப் பொருட்களை முறையான முகாமைத்துவத்திற்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த குப்பை முகாமைத்துவம் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காததுடன் 2017 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கழிவுப்பொருள் முகாமைத்துவச் செயற்திட்டத்திற்காக கட்டிடங்கள் நிர்மாணிக்கும் வேலை ஆரம்பித்திருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) கணக்கீடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) உள்ளகக் கணக்காய்வு
(ஊ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்